# காணி உபபிரிவிடல் மற்றும் காணிகளை ஒன்றிணைத்தலுக்கான அனுமதி வழங்குதல

நகர அபிவிருத்தி பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் காணப்படும் காணிகளை பிரித்தல் அல்லது இணைத்தல் சம்பந்தமாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரத்தை பயன்படுத்துவதற்காக அதிகாரம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முழுமையான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு ?

**01**

நீங்கள் முதலில் காணி உபபிரிவிடலுக்கான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளுங்கள். அதை சேவை கருமபீடத்தில் அல்லது இணையத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**02**

விண்ணப்பபடிவத்தில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய அதை முழுமைப்படுத்துங்கள்.

**03**

விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய அமைய அதை முழுமைப்படுத்துங்கள்.

விண்ணப்பப்படிவத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய தேவையான அனைத்து ஆவணங்களையும் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

**04**

மேலதிக ஆவணங்களாக

காணிக்கு செல்வதற்காக வரையப்பட்ட வரைபடம் ஒன்று.

காணி உறுதி பத்திரம் எழுதும் சட்டத்தரணியால் உறுதிப்படுத்திய உறுதிப் பத்திரங்களின் மூன்று பிரதிகள்

ஆதனவரிப்பதிவு பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டு இருக்க வேண்டும்.

**05**

விண்ணப்பப்படிவத்தை சேவை கருமபீடத்தில் ஒப்படையுங்கள்.

தேவையான முற்பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுங்கள்.

**06**

விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொண்டது தொடர்பாகவும் களப்பரிசோதனை செய்வதற்கு வரும் திகதி தொடர்பாகவும அந்த தருணத்திலேயே சேவை கருமபீட அதிகாரியால் விண்ணப்பதாரிக்கு தெரிவிக்கப்படும்.

**07**

நியமிக்கப்பட்ட நாளில் தொழில்நுட்ப அதிகாரி களத்துக்கு சென்று தனது கண்காணிப்பையும் பரிந்துரைகளையும் பதிவு செய்து கொள்வார்.

**08**

அதன் பின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தமது கண்காணிப்பையும் பரிந்துரைகளையும் கொண்ட ஆவணங்களை திட்டமிடல்குழு ஒன்றுகூடும் திகதியில் அவர்களுக்கு அதை முன்வைப்பார்.

**09**

திட்டமிடல்குழு ஒன்றுகூடிய தினத்தில் இருந்து இரண்டு நாட்களுக்குள்

காணி அளவீட்டு திட்டம்

அபிவிருத்தி பணிக்காக அனுமதி வழங்கிய விபரம் தொடர்பாக குறிக்கும் அனுமதி பத்திரத்திற்கும அதிகாரம் பெற்ற அதிகாரியால் கையொப்பமிட்டு சேவை கருமபீட காரியாலயத்துக்கு ஒப்படைத்து விண்ணப்பதாரியை அறிவுறுத்தப்படும்.

**10**

இதை விண்ணப்பத்தாரிக்கு காரியாலயத்துக்கு சென்று பெற்று-க்கொள்ள முடிவதோடு தேவை என்றால் தபால் அல்லது இலத்திரனியல் ஆவணமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**11**

ஏதாவது ஒரு காரணத்தால் உங்களின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதற்காக நீங்கள் முழுமைப்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரி உங்களை அறிவூட்டுவார்.

**12**

சில சந்தர்ப்பத்தில் உங்களின் விண்ணப்பம் திட்டமிடல் குழுவினால் நிராகரிக்கப்பட்டால் அமைச்சருக்கு மேல் முறையீடு செய்ய உங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.



Funded by European Union

UNDP

STRIDE

CDLG Capacity Development of Local Governments